பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 7 திருவள்ளுவர் ஆண்டு 2022 மார்கழி 30 செவ்வாய்க்கிழமை (14-01-1992) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 49

# ஐ. நா. தூதரகத்தை ஆலோசியாமல் அகதிகளை திருப்பி அனுப்ப முயற்சி!

## வவுனியாவில் மோதல்!

யாழ்ப்பாணம், ஜன. 14
வவுனியா — பம்பைமடு, சாஸ்திரி கூழாங்குளம் பகுதிகளில் நேற்று விடுதலைப் புலிகளுக்கும், படையினருக்கும் இடையில் மோதல் இடம்பெற்றதாக செய்திகள் தெரிவிக்கின்றன. சேதவிவரங்கள் குறித்து தகவல்கள் கிடைக்கவில்லை. [உ-3]

## வளலாயில் படையினர் அரண் அமைக்க முயற்சி

வளலாய் மேற்குப் பகுதியில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் அப்பகுதியில் தாம் அமைத்திருக்கும் முகாமின் முன் பக்கமாக சுமார் 15 அடி உயரத்துக்கு அணைக்கட்டுப் போன்ற அரண் ஒன்றை அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

முகாமைச் சூழ தேத்தல் பிட்டி, மாவடி, முத்துப்புளியடி ஆகிய தோட்டப் பகுதிகளை உள்ளடக்கியதாக நீண்ட அரண் அமைக்கப்பட்டு வருகிறது.

அப்பகுதியில் உள்ள வீடுகளை உடைத்தும், தோட்டங்களில் மண்ணை அகழியாக வெட்டி எடுத்தும், புல்டோசர்கள் மூலம் அரண் அமைக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (உ-15)

## பருத்தித்துறைக் கடலில் மீனவர் தாக்கப்பட்டனர்

வடமராட்சி, ஜன. 14
பருத்தித்துறைக் கடல்பகுதியில் மீன்பிடித்துக் கொண்டிருந்த மீனவர்கள் சிலர் கடற்படையினரால் வழிமறிக்கப்பட்டு தாக்கப்பட்டனர். இச்சம்பவத்தில் இரு மீனவர்கள் படுகாயமடைந்தனர். ஒருவர் காயமின்றித் தப்பினார்.

மீனவர்களின் வலைகள் படையினரால் கடலில் வீசப்பட்டன; கட்டு மரமும் சேதமடைந்தது.

நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற இந்தச் சம்பவத்தில் ம. செபஸ்தியாம்பிள்ளை [வயது 34], பொ. அன்ரன் மரியதாஸ் [வயது 24] ஆகிய இருவருமே படுகாயமடைந்தனர். இவர்களை அ. அருள்தாஸ் என்ற மற்றைய நபர் மீட்டு வந்தார்.

காயமடைந்த இருவரும் மந்திகை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருக்கின்றனர். [உ-165]

## 5 நோயாளர் உட்பட 10 பேர் தீவகத்திலிருந்து வந்தனர்

யாழ்ப்பாணம், ஜன. 14
நயினாதீவு, அனலைதீவு, எழுவைதீவு ஆகிய பகுதிகளிலிருந்து ஐந்து நோயாளர் உட்பட பத்துப் பேர் நேற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தனர்.

நோயாளர்களையும் அவர்களின் உதவியாளர்களையும் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் உதவியுடன் கப்பலில் பருத்தித்துறை துறைமுகத்துக்குப் படையினர் அனுப்பி வைத்தனர்.

கப்பலில் வந்து சேர்ந்த நயினாதீவு 5ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த ரீ. தியாகரி [வயது 17], எழுவைதீவில் தபாலதிபராகக் கடமையாற்றும் மாதகலைச் சேர்ந்த இராயப்பு பெனடிக்ட் [வயது 54], அனலைதீவைச் சேர்ந்த சபாரட்ணம் பாக்கியம் [வயது 60] ஆகிய மூவரும் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டனர். [உ-5-15]

## வன்னியில் தொற்று நோய் பரவும் ஆபத்து நிலை!

யாழ்ப்பாணம், ஜன. 14
மன்னார், வன்னி மாவட்டங்களில் தொற்று நோய்கள் தீவிரமாகப் பரவி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

டெங்கு, மலேரியா, நெருப்புக் காய்ச்சல் போன்ற நோய்கள் தீவிரமாகப் பரவுவதாகவும் —

இதுவரை இந்த நோய்களால் பத்துப்பேர் இறந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

பூநகரியில் இருந்து இடம்பெயர்ந்து முழங்காவிலில் தங்கியுள்ளவர்களும், மடு அகதி முகாமில் தங்கியுள்ளவர்களுமே இந்த நோய்களால்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## விபத்தில் சிக்கிய விமானத்தில் பாஸ்கரலிங்கம் இருந்தாராம்

கொழும்பு, ஜன. 14
கடந்த வெள்ளிக்கிழமை இரவு என்ஜின் ஒன்று தீப்பற்றியதால் அவசரமாக சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தில் தரை இறக்கப்பட்ட எயர்லங்கா விமானத்தில் இருந்த 124 பயணிகளில் நிதி அமைச்சுச் செயலாளர் திரு. ஆர். பாஸ்கரலிங்கமும் ஒருவர் என்று தெரிவிக்கப்படுகிறது.

பாஸ்கரலிங்கம் மயிரிழையில் உயிர் தப்பினார் என்றும் இரு பயணிகள் காயமடைந்தனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

விமானத்திற்கு பலத்த சேதமேற்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. [இ-எ]

## சர்வதேச நிறுவனங்கள் ஆட்சேபம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜனவரி 14
தமிழகத்தில் தஞ்சம் அடைந்துள்ள ஈழத் தமிழ் அகதிகளை இந்திய அரசும், ஸ்ரீலங்கா அரசும் சேர்ந்து இங்கு கூட்டி வருவது குறித்து சர்வதேச அகதிகள் அமைப்புகள் ஆட்சேபம் தெரிவித்துள்ளதாக அறிய வருகிறது.

இரண்டு நாடுகளும், ஐக்கிய நாடுகள் சபையின் உப நிறுவனமான அகதிகளுக்கான ஐக்கியநாடுகள் தூதரகத்தைக் கலந்தாலோசிக்காமலேயே ஈழத்தமிழ் அகதிகளை இங்கு கூட்டி வருவது குறித்து முடிவு செய்ததை அவை கண்டித்திருக்கின்றன.

ஐ. நாவில் அங்கம் வகிக்கும் நாடுகளின் அகதிகள் விவகாரத்தில், அகதிகள் தொடர்பாக எழும் பிரச்சினைகள் ஐ. நாவுடன் கலந்தாலோசித்தே செய்யப்பட வேண்டும். அதன் மேற்பார்வையிலேயே

(3ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய அதிகாரிகளுடன் பேச ஸ்ரீலங்கா பொலீஸ் குழு சென்னைக்கு விஜயம்

கொழும்பு, ஜன. 14
ராஜீவ் காந்தி கொலைச் சம்பவம், கொழும்பு கூட்டுப் படைத் தலைமையக குண்டு வெடிப்புச்சம்பவம் ஆகியவை தொடர்பாக இந்தியப் புலனாய்வுத்துறை அதிகாரிகளுடன் பேச்சுக்கள் நடத்துவதற்கு ஸ்ரீலங்கா உயர் பொலீஸ் அதிகாரிகள் குழு ஒன்று சென்னை சென்றிருக்கிறது.

குற்றப்புலனாய்வுத் துறைப் பணிப்பாளர் ஒஸ்டின் குண

[3 ஆம் பக்கம் பார்க்க]

## வீரமரணம்

யாழ்ப்பாணம், ஜன. 14
நேற்று முன்தினம் வவுனியா - மன்னார் வீதியில் பதுங்கியிருந்த படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் இடம்பெற்ற மோதல் சம்பவம் ஒன்றில் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளியான ஜெசிந்தன் (துரைராஜா கௌரிசங்கர் - வவுனியா) வீரமரணமடைந்தார். [உ-3]

## விமானம் நோட்டம்

யாழ்ப்பாணம், ஜன. 14
புதியரக விமானம் ஒன்று நேற்று பகல் வேளையில் குடாநாட்டின் வான் பிராந்தியத்தில் நீண்ட நேரம் ரோந்து சுற்றியது.

அந்த விமானம் வானில் குறுக்கும் நெடுக்குமாகப் பறந்து நோட்டமிட்டதை அவதானிக்க முடிந்தது.

இதேவேளை ஏனைய நாட்களைவிட நேற்று ஹெலிகள், விமானங்கள் அடிக்கடி பறந்து செல்லக் காணப்பட்டன. (உ-5-15)

## பொங்கல் விடுமுறை

பொங்கல் விடுமுறையை முன்னிட்டு நாளை புதன்கிழமை (15-1-1992) உதயன் பணிமனை இயங்கமாட்டாது. அதன் காரணமாக வியாழன் அன்று (16-1-1992) உதயன் வெளிவரமாட்டான் என்பதை வாசகர்களுக்கும், விளம்பரதாரர்களுக்கும் அறியத்தருகிறோம்.

## ராணுவ அதிகாரி உயிரிழந்தார்

கொழும்பு, ஜன. 14
கடந்த ஞாயிறன்று திருகோணமலை மாவட்டம் கும்புறுப்பிட்டிக்கு அருகே புளியங்குளம் என்ற இடத்தில் விடுதலைப் புலிகள் வைத்த நிலக்கண்ணி வெடித்ததில் இராணுவ அதிகாரி ஒருவர் உயிரிழந்தார்; மற்றொருவர் படுகாயமடைந்தார்.

பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள்காட்டி இவ்வாறு அறிவிக்கப்பட்டது. [உ-எ-3]

## முச்சந்தி முரளி



அப்ப... வல்லரசின்ரை நிலை வளர்த்த கடா மார்பிலை பாய்ந்த மாதிரி எண்டு சொல்லுங்கோ......!

### புலிகளின் தலைவரை

## நாடு கடத்தும்படி கோர ஒப்பந்தம் ஏதும் இல்லை!

### சிறில் ரணதுங்கா கூறுகிறார்

கொழும்பு, ஜன. 13
இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையே நாடு கடத்துதல் தொடர்பான உடன்படிக்கை எதுவும் தற்போது கிடையாது.

பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் ஜெனரல் சிறில் ரணதுங்கா கடந்த வியாழன் இடம்பெற்ற வாராந்திர செய்தியாளர் மாநாட்டில் இவ்வாறு தெரிவித்தார்.

''விடுதலைப் புலிகளின் உயர் தலைவர் திரு. வே. பிரபாகரனை நாடு கடத்தும்படி இந்திய அரசு கோரிக்கை விடுத்தால் அதனை இலங்கை அரசு ஏற்குமா?'' — என்று செய்தியாளர் ஒருவர் கேட்டார்.

அதற்குப் பதிலளிக்கையிலேயே ஜெனரல் ரணதுங்கா இதனைத் தெரிவித்தார்.

திரு. பிரபாகரனை நாடு கடத்தும்படி இந்திய அரசு கோருமானால் அந்த விஷயம் சட்டமா அதிபர், உயர்நீதிமன்றம் மற்றும் சட்ட அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டு வரப்படும் என்றும் ஜெனரல் ரணதுங்கா கூறினார். (உ-எ)

## கப்பலில் வந்த மருந்தில் அரைவாசியே விற்பனைக்கு!

### விலைப்பட்டியலும் வைக்கப்படும்

யாழ்ப்பாணம், ஜன. 14
தனியார் நிறுவனங்கள் இரண்டினால் கப்பல் மூலம் கொண்டு வரப்பட்ட ஆங்கில மருந்து வகைகளில் அரைவாசி தனியார் ஆஸ்பத்திரிகளுக்கும், தனிப்பட்ட முறையில் வைத்தியம் செய்யும் டாக்டர்களுக்கும் வழங்கப்படும்.

மிகுதி அரைவாசி மட்டுமே தனியார் மருந்துச்சாலைகளுக்கு விநியோகிக்கப்படும்.

நேற்று யாழ். செயலகத்தில் அரசாங்க அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் தலைமையில் நடந்த மாநாடு ஒன்றில் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

கப்பலில் கொண்டு வரப்பட்ட மருந்துகளுக்கு விலைகளை நிர்ணயிக்க பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் தலைமையில் குழு ஒன்றும் நியமிக்கப்பட்டுள்ளது.

நேற்றைய மாநாட்டில் மேற்கொள்ளப்பட்ட ஏனைய முக்கிய முடிவுகள் வருமாறு:-

★ ஆங்கில மருந்து விற்பனை செய்யும் சகல மருந்து விற்பனை நிலையங்களிலும் மருந்துகளின் விலைப்பட்டியல் பாவனையாளர் பார்வையிடக்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## அமெரிக்க - பாகிஸ்தான் உறவில் முறுகல் நிலை!

வாஷிங்டன், ஜன. 14
அமெரிக்காவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

கடந்த இருபது ஆண்டுகளுக்கு மேலாக பாகிஸ்தானுக்குச் சாதகமாகக் கடைப்பிடித்து வந்த தனது வெளியுறவுக் கொள்கையை ஆச்சரியப்படத்தக்க விதத்தில் அமெரிக்கா மாற்றிக் கொண்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதி புஷ் நிர்வாகத்தில் முக்கிய பங்கு வகிப்பவரும் ஆளும் குடியரசுக் கட்சியைச் சேர்ந்தவருமான செனட்டர் லாறி பிரிஸ்லர் பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத்தில் வெளியிட்ட கருத்துகள் இத்திடீர் திருப்பத்தை வெளிப்படுத்தியுள்

[3 ஆம் பக்கம் பார்க்க]

## அமெரிக்க வேண்டுகோள் பாகிஸ்தான் நிராகரிப்பு

இஸ்லாமபாத், ஜன. 14
ஆயுத நோக்குடைய அணுசக்தித் திட்டத்தை நிறுத்துமாறு அமெரிக்க அரசு விடுத்த வேண்டுகோளை பாகிஸ்தான் நிராகரித்து விட்டது.

அணு ஆயுதப் பரவல் தடுப்பு ஒப்பந்தத்தில் ஒரு தரப்பாகக் கையெழுத்திடவும் பாகிஸ்தான் மறுத்துவிட்டதாக அறிவிக்கப்படுகிறது.

பாகிஸ்தான் நிதி அமைச்சர் மற்றும் வெளியுறவு இணை அமைச்சர் ஆகியோரோடு அமெரிக்க செனட்டர் பிறிஸ்லர் நடத்திய பேச்சுகளின் பின்னர் இம்முடிவு தெரிவிக்கப்பட்டது. [உ-எ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### புத்தகம் கட்டுதல்

ஆய்வுக் கட்டுரைகள், பாடசாலை மாணவர்களின் புத்தகங்கள், நாவல்கள் மற்றும் சகல விதமான புத்தகங்களும் உரிய நேரத்தில் கவர்ச்சியான முறையில் கட்டிக் கொடுக்கப்படும். அருண் அச்சகம், 15, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

(சி/1186)

### தவறிவிட்டது

ஐ. சிறீஸ்கந்தராஜா என்பவரது 583582673V இலக்க அடையாள அட்டை 3-1-92 அன்று ஓமந்தையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து த. தங்கவேலு, தொல்புரம் மத்தி, சுழிபுரம். என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

[5002]

### அச்சு வேலைகள்

திருமணம், திறப்பு விழா, புதுமனை புகுவிழா அழைப்பிதழ்கள், மற்றும் அந்தியேட்டி அழைப்பிதழ்கள், நினைவு மலர்கள் ஆகியவற்றைச் சிறந்த முறையில் உரிய வேளையில் நீங்கள் அச்சிட்டுப் பெற்றுக் கொள்ள நாடுங்கள்: அருண் அச்சகம், 15, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

[சி/1256]

### வெளிவந்து விட்டது

5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை, கணக்கியல் உ. த. [9 வருடம்] வினா-விடை வெளிவந்து விட்டன. பெற்றுக் கொள்ளும் இடங்கள்: அறிவகம் புத்தகசாலை, மணிக்கூட்டு வீதி. சுப்பிரமணியம் புத்தகசாலை, 235, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

[சி/1285]

### நாற்றுக்கள் விற்பனைக்கு

விளாத்தியில், நாரத்தையில் ஒட்டிய நல்ல இன தோடங்கன்றுகள் விற்பனைக்கு உண்டு. சைவ வித்தியாவிருத்திச் சங்கம், கலாசாலை வீதி, திருநெல்வேலி.

(சி/1276)

### சிறுவர் பாடசாலை

பரி. பேதுரு சிறுவர் பாடசாலை ஆரம்பம்: 6-1-1992 விண்ணப்பப் படிவங்களை றிம்மர் மண்டபம், வேம்படி வீதியிலும், கில்னர்மண்டபம், வண்ணார் பண்ணையிலும் பெற்றுக்கொள்ளலாம்.

[சி/1323]

### அப்பியாசக் கொப்பிகள்

பாடசாலைப் பிள்ளைகளுக்கான அப்பியாசக் கொப்பிகள், புத்தகங்கள், குறைந்த விலையில் விற்பனையாகின்றன. அறிவகம், 374, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். [வெலிங்டன் சந்திக்கு அருகாமை]

[சி/1284]

### வரலாறு

விற்பனையாகின்றது! சகல புத்தகசாலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம். வரலாறு-ஆண்டு 11, வரலாறு-ஆண்டு 6 புதிய பாடத்திட்டத்திற்கு அமைய எழுதப்பட்டது. ஆக்கியோன்: ந. தர்மபாலன் [சமூகக்கல்வி ஆசிரிய ஆலோசகர்]

[19244]

### ஆசிரியர் பயிற்சி

பரி. பேதுரு சிறுவர் பாடசாலை ஆசிரியர் பயிற்சி ஆரம்பம்: 15-1-1992 ஒரு வருட பயிற்சி. O/L பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பப்படிவங்கள் கில்னர் மண்டபம், வண்ணார் பண்ணையில் பெற்றுக்கொள்ளலாம்.

[சி/1322]

## சிங்கள சேவையின் வாராந்த பரிசு கைதடிவாசிக்கு!

கொழும்பு, ஜன. 14

பி. பி. ஸியின் சிங்களச் சேவை வாராவாரம் பரிசாக வழங்கும் ரீ ஷேர்ட்டைப் பெறும் அதிர்ஷ்டசாலியாக இவ்வாரம் கைதடியைச் சேர்ந்த கே. கணபதிப்பிள்ளை [செல்வபதி, கைதடி] என்பவர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

சிங்கள ஒலிபரப்பு சேவைக்கு இவர் எழுதிய கடிதத்தில், தான் சைக்கிள் டைனமோவை உபயோகித்தே பி. பி. ஸி. நிகழ்ச்சியைக் கேட்பதாகவும் மின்சாரம் இல்லாத நிலையில் அரசு பற்றறிகளையும் தடை செய்திருப்பதாகவும் தெரிவித்திருந்தார்.

மேலும் அரசு மெழுகு வர்த்திகளையும் தடை செய்திருப்பதால் மதக் கடமைகளை ஆற்ற முடியாதிருப்பதாகவும் தனது கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார். [இ-10]


# கம்பியூட்டர் கல்வி

★ BASIC ★ d BASE III+
★ LOTUS 1-2-3 ★ WORD STAR 2000+

புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன:

வடமராட்சியில் –
15-01-1992 [திங்கள், புதன், வெள்ளி]
18-01-1992 [சனி, ஞாயிறு]

யாழ். நகரில். –
22-01-1992 [திங்கள், புதன், வெள்ளி]
25-01-1992 [சனி, ஞாயிறு]

(செய்முறை பயிற்சிகள் யாவும் ஜெனரேற்றர் மூலம் வழங்கப்படும்)

யுனிக்கோ கம்பியூட்டர் சென்ரர்,
சதா பொன்ஸ்,
அல்வாய் கிழக்கு.
அல்வாய்.




யுனிக்கோ கம்பியூட்டர் சென்ரர்,
37, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணர்.

[சி-1263]



மனைக்கு வெளியே ஓர் மனை

★ ஜெசித்தாரா ★
## உள்ளூர் உணவகம்
## உங்களை அழைக்கின்றது!

ஆம், வீட்டில் இருந்தபடியே
உணவு உண்ணும் நிலை

★ சுத்தம் ★ சுகாதாரம் ★ சுவை

இவை மூன்றிற்கும் முதலிடம்.
வந்து பாருங்களேன் மிச்சம் சொச்சத்தை.

ஜெசித்தாரா உள்ளூர் உணவகம்,
19/3, கொழும்புத்துறை சாலை,
சுண்டிக்குளி.
(சுண்டிக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை)

விளம்பர அமைப்பு:
செனித் ஜோ. எகட்டன்.

★ எல்லா வகையான உணவுக் கட்டளைகளும் 24 மணி நேரத்தில் ஏற்றுக்கொள்ளப்படும்.

(19317)



## விக்னா கல்வி நிறுவனம்,

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

[A/L கலை, வர்த்தக வகுப்புக்களிற்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்]

93 பிரிவு - 2
ஆரம்பம்: 19-1-1992

எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழு:

பொருளியல் — திரு. கலாகரன்
வர்த்தகவியல் — திரு. தேவராஜா
கணக்கியல் — திரு. வன்னியசிங்கம்
அளவையியல் — திரு. சுப்பிரமணியம்
இ. நாகரிகம், இ. சமயம் — திரு. காரை. சுந்தரம்பிள்ளை
தமிழ் — திரு. குழந்தைவேல்
புவியியல் — திரு. குணராஜா
அரசியல் — திரு. சிலன்
வரலாறு —

மு. குறிப்பு: அனுமதிகளை முன் கூட்டியே பெற்றுக் கொள்ளவும்.

[சி/1288]


## 31ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்
### சிவஞானம் மயில்வாகனம்
[இளைப்பாறிய மக்கள் வங்கி பிரதான வீதி, காசாளர்]

அன்னையின் மடியில்: 30 - 06 - 1928
இறைவன் அடியில்: 15 - 12 - 1991

1991 மார்கழி திதி: பூர்வ நவமி

அணைந்ததோர் அன்புத் தீபம் – என்றும்
அணைந்திடாப் பாசத் தீபம்
மறைந்ததெம் திருவிளக்கு – என்றும்
மங்கிடாக் குலவிளக்கு.

15 - 12 - 1991 அன்று அன்னாரின் ஈமக்கிரியையில் கலந்து மலரஞ்சலி செலுத்தியும், ஆறுதல் கூறியும், பல வழிகளில் உதவியும், ஒத்துழைப்பும் நல்கிய அனைவருக்கும் எமது நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

– குடும்பத்தினர்.

38, அம்பாள் வீதி,
நாயன்மார்கட்டு,
யாழ்ப்பாணம்.

[19334]

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
### துரையப்பா சுப்பிரமணியம்
[முன்னாள் பிறப்பு, இறப்பு, விவாகப் பதிவாளர் - கொக்குவில், கோண்டாவில்]

தோற்றம்: 15 - 06 - 1909
மறைவு: 05 - 01 - 1990

திதி: 14 – 01 – 1992

ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

சுப்பிரமணியம் - சேய்மானந்தன்.
(மகன்)

பதிவுகாரர் லேன்,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம்.

[19225]

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



திருமதி
### தங்கப்பிள்ளை சுப்பையா
(குப்பிழான்)

மலர்வு: 27 — 06 — 1900
உதிர்வு: 15 — 12 — 1991

பால்நிலவில் உணவூட்டி வளர்த்த அன்னை!
பாரினிலே நாமுயர வைத்த தெய்வம்!
எமைப் பிரிந்து திங்களொன்று பலவாகிச் சென்றாலும்
உன்னினைவோடு எந்நாளும் வாழ்ந்திடுவோம் அம்மா!

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

சு. நடராஜன்,
நாமகள் வீதி,
கொக்குவில் கிழக்கு.

[19322]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

# அதே கதி தானா?

அரசாங்கக் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியும், எதிர்க்கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும், இனப்பிரச்சினைக்குரிய தத்தமது யோசனைகளை இன்னும் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவிடம் சமர்ப்பிக்கவில்லை; பின்னடித்து வருகின்றன.

அனேகமாக நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அரசியல் கட்சிகள் பலவும் தமது யோசனைகளைத் தெரிவுக் குழுவுக்குச் சமர்ப்பித்துள்ளன. நாடாளுமன்றத்துக்கு வெளியே உள்ள மக்கள் அமைப்புகள், குழுக்கள் என்பனவும் தமது யோசனைகளைச் சமர்ப்பித்துவிட்டன.

ஆனால் இந்த நாட்டில், இனப்பிரச்சினை இன்றைக்குள்ள பூதாகார நிலைக்கு வளர்வதற்கு முழுக் காரணர்களாக இருந்த ஐக்கிய தேசியக் கட்சியும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் இன்னும் தங்கள் யோசனைகளைச் சமர்ப்பிக்கவில்லை.

ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழுக் கூட்டம் அண்மையில் கூடி, தெரிவுக் குழுவுக்குத் தனது யோசனையைச் சமர்ப்பிக்கப் போவதாக அறிவித்திருந்தது. ஆனால் தெரிவுக் குழுவின் முதலாவது கூட்டமும் நடந்து முடிந்துவிட்டது. இன்னும் அதன் யோசனை தெரிவுக்குழுவுக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

இது போலவே சுதந்திரக் கட்சியும் தனது யோசனை என்று ஒன்றைச் சமர்ப்பிப்பதில் அக்கறை காட்டவில்லை. தெரிவுக் குழு முன் ஆராயப்படும் மற்றவர்களின் யோசனைகளை ஆராய்ந்து எடுக்கப்படும் முடிவை ஆதரிப்பதற்கு முனைந்துள்ளது.

இரண்டு கட்சிகளுமே பிரச்சினையில் இருந்து மெதுவாக நழுவிக்கொள்ளப் பார்க்கின்றன. இரண்டு வருடங்களாக நடைபெற்று, எந்தப் பெறு பேற்றையும் காணாது தொப்பெனக் கைவிடப்பட்ட அனைத்துக் கட்சி மாநாடு தோல்வி கண்டதற்கு இந்த இரண்டு கட்சிகளுமே காரணம்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைப் பொறுத்த மட்டில் ஐக்கிய தேசியக் கட்சி சமர்ப்பிக்கும் யோசனையை அறிந்து கொண்டு, தனக்கு அரசியல் லாபம் தேடும் வகையில் சொந்த யோசனையைத் தயாரிக்க விரும்பியது.

ஐ. தே. கட்சியும் எதிர்க் கட்சியின் யோசனையைப் பார்த்து தனது நிலைப்பாட்டை வெளியிட எண்ணியது. இரண்டு கட்சிகளும் நான் பிந்தி நீ முந்தி என்று கண்ணாமூச்சி விளையாடின.

இத்தகைய போக்கினாலேயே அனைத்துக் கட்சி மாநாட்டினால், இனப்பிரச்சினை தீர்வுக்குரிய உருப்படியான ஓர் அடிப்படையைத் தானும் உருவாக்க முடியாமற் போயிற்று!

இப்போதும், இரண்டு பிரதான கட்சிகளும் பிடிகொடுக்காமல், பட்டும் படாமலும் தமது பொறுப்பைத் தட்டிக் கழிக்க முயற்சிக்கின்றன. இந்த நாட்டின் மிக முதல் விவகாரமான இனப்பிரச்சினையில் அரசியல் சுயநலம் கருதி சொந்த யோசனைகளை முன்வைப்பதற்குப் பின் நிற்கின்றன. அவ்வாறு எதனையும் வைத்தால் தங்கள் அரசியல் எதிர்காலம் பாதிக்கப்பட்டு விடும் என்றும் இனப்பிரச்சினை தீர்ந்தால் தாங்கள் வாக்குச் சேகரிப்பது கடினம் என்றும் அவை எண்ணுகின்றன.

ஆகவே அனைத்துக் கட்சி மாநாட்டுக்கு நேர்ந்த கதியே தெரிவுக் குழுவுக்கும் உண்டாகும் என்று கருதவேண்டியுள்ளது.

## தீவகத்தில் படகுச்சேவை!

யாழ்ப்பாணம், ஜன. 14

காரைநகருக்கும் நயினாதீவுக்கும் இடையே பயணிகள் படகுச் சேவை ஒன்றை படையினர் நடத்துகின்றனராம்!

இந்தச் சேவை மூலம் காரைநகர், அனலைதீவு, எழுவைதீவு மக்கள் வெள்ளிக்கிழமை தோறும் நயினாதீவுக்கும் —

நயினாதீவு, அனலைதீவு, எழுவைதீவு மக்கள் திங்கட்கிழமை தோறும் காரைநகருக்கும் சென்றுவர முடிகிறதாம்,

எங்கு சென்றாலும் ஒருவருக்கு ஐந்து ரூபா என்ற அடிப்படையில் கட்டணம் அறவிடப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(உ-15)

## ஆசிரிய கலாசாலை நேர்முகப் பரீட்சைகள்

யாழ்ப்பாணம், ஜன. 14

பலாலி, கோப்பாய் ஆசிரிய கலாசாலைகளில் 1991, 92 ஆம் ஆண்டுக்குரிய இரண்டாவது பட்டியலில் மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதற்கான நேர்முகப்பரீட்சைகள் இம்மாதம் 25 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளன.

இதேவேளை முதலாவது பட்டியலில் ஏற்கனவே நேர்முகப் பரீட்சையில் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான புதிய வகுப்புகள் எதிர்வரும் 20 ஆம் திகதி ஆரம்பமாகின்றன.

(உ-5)

## கடற் புலிகளிடம் மகனை ஒப்படைத்த தமிழ்த்தாய்!

யாழ்ப்பாணம், ஜனவரி. 14

குருநகர் றெக்கிளமேசன் வீதியைச் சேர்ந்த தாய் ஒருவர் தனது 14 வயது மகனைத் தானே முன்வந்து கடற்புலிகள் இயக்கத்தில் சேர்த்தார். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

மரியதாஸ் அக்கினேஸ் என்ற பெண்மணியே தனது மகனான மரியதாஸ் அன்ரனிவின்சனை கடற்புலிகளின் யாழ். மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. ஸ்ரனி மாஸ்டரிடம் ஒப்படைத்தார்.

[உ-51]

## மனையியல் பரீட்சை

யாழ்ப்பாணம், ஜனவரி. 14

1990 ஆம் ஆண்டு விசேட ஜீ. சீ. ஈ. (உயர்தர) பரீட்சையின் மனையியல் பாட செய்முறைப் பரீட்சை எதிர்வரும் 25 ஆம் திகதி முதல் 31 ஆம் திகதிவரை கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் நடைபெறவுள்ளது.

இந்தப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள பரீட்சார்த்திகளின் அனுமதி அட்டைகள் விரைவில் தபாலில் அனுப்பி வைக்கப்படும் என வட பிராந்திய கல்விப் பணிப்பாளர் இ. சுந்தரலிங்கம் தெரிவித்தார்.

கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களைச் சேர்ந்த பரீட்சார்த்திகளுக்கு விசேட வசதிகள் செய்யப்படும் என்றும் அவர் சொன்னார்.

[உ-5]

## விபத்தில் குழந்தை படுகாயம்

யாழ்ப்பாணம், ஜனவரி. 14

மோட்டார் சைக்கிள் விபத்தொன்றில் சிக்கிய 3 வயதுக்குழந்தை தலையில் படுகாயமடைந்த நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளது.

மாதகல் பிரதானவீதியில் நேற்று காலை இடம்பெற்ற இச்சம்பவத்தில் அவ்விடத்தைச் சேர்ந்த இராசநாயகம் சுரேஷ் கிருஷ்ணா என்ற 3 வயது ஆண்குழந்தையே காயமுற்றது.

[உ-15]

## அமெரிக்க . .

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

ளன என்று பி. பி. சி. தெரிவித்தது.

பாகிஸ்தானிடம் அணுகுண்டு இருப்பதை ஐயத்துக்கு இடமின்றி அமெரிக்கா ஊர்ஜிதம் செய்துவிட்டதாகம் செனட்டர் பிறிஸ்லர் கூறினார்,

இந்தியாவிடம் அணு ஆயுதம் ஏதும் இல்லை என்று கூறிய அவர், இந்தியாவுக்கு ஆதரவாகக் கருத்து வெளியிட்டார்.

''அணு ஆயுதத் தயாரிப்பில் நடைமுறை சாராத, திறனாற்றலுக்கு அப்பாற்பட்டே பாகிஸ்தான் சென்றுவிட்டது.

இஸ்லாமிய குண்டு எனப்படும் வசதியை சில நாடுகள் தங்கள் வசம் வைத்திருப்பது கவலை தருகிறது. அணு ஆயுத வசதி பெற்ற இஸ்லாமியக் கூட்டரசு ஒன்றின் ஒரு பகுதியாக பாகிஸ்தான் உருவெடுத்து விடக்கூடிய ஆபத்து ஏற்பட்டுள்ளது.

பாகிஸ்தான் தனது அணு குண்டையும் அணு ஆயுத ஆற்றலையும் பகிரங்கமாகவே அழித்து விடவேண்டும்.

அமெரிக்க — பாகிஸ்தான் நட்புறவு நீடிக்க இந்த நடைமுறை ஒன்றுதான் வழி வகுக்கும்.

அணு குண்டுகளை வைத்திருக்கும் இஸ்லாமிய நாடுகளின் அணி ஒன்று உருவாகி வருவதும் —

இஸ்லாமிய அடிப்படை வாதம் பரவி வருவதும் உலகில் கணிசமான அளவு அச்சத்தையும் ஐயப்பாட்டை எழுப்பியிருக்கின்றன — இப்படி அவர் மேலும் தெரிவித்தார்.

# அமெரிக்க செனட்டரை சந்திக்க பாகிஸ்தான் தலைவர்கள் மறுப்பு

பாகிஸ்தானுக்கு விஜயம் செய்திருக்கும் அமெரிக்க செனட்டர் பிறிஸ்லரைச் சந்திக்க அந்த நாட்டின் ஜனாதிபதி குலாம் இஷாக் கானும் பிரதமர் நவாஸ் ஷெரீபும் மறுத்து விட்டனர் என்று அறிவிக்கப்படுகிறது.

இந்திய விஜயத்தின் போது அமெரிக்க செனட்டர் பிறிஸ்லர் பஞ்சாப் மற்றும் காஷ்மீர் மாநிலங்களில் இடம் பெற்று வரும் தீவிரவாதச் செயல்களின் பின்னணியில் பாகிஸ்தான் இருப்பதாகக் குற்றஞ்சாட்டியிருந்தார்.

இதன் காரணமாகவே அவரைச் சந்தித்துப் பேச்சுகள் நடத்த பாக். ஜனாதிபதியும் பிரதமரும் மறுத்து விட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

[இ-எ]

# கஸாகிஸ்தானிலிருந்து பாகிஸ்தானுக்கு யுரேனியம்

## சி ஐ. ஏ. தகவல் தெரிவிப்பு

முன்னாள் சோவியத் யூனியனில் அங்கம் வகித்த குடியரசுகளில் ஒன்றான கஸாகிஸ்தான் நாட்டிலிருந்து பெருமளவில் யுரேனியத்தை பாகிஸ்தான் வாங்க ஆரம்பித்திருப்பதாக அமெரிக்காவின் சி. ஐ. ஏ. உளவு ஸ்தாபனம் அறிவித்திருக்கிறது.

சோவியத் யூனியனின் மறைவை அடுத்து தோன்றிய ஒன்பது இஸ்லாமிய சுதந்திர நாடுகளில் கஸாகிஸ்தானும் ஒன்றாகும்.

அணுகுண்டு தயாரிப்பதற்குத் தேவையான யுரேனியம், கஸாகிஸ்தானில் உற்பத்தி செய்யப்படுகின்றது.

அரபு நாடுகளுக்கு சலுகை விலையில் யுரேனியத்தை விற்பனை செய்ய கஸாகிஸ்தான் முன் வந்துள்ளதாகவும் சி. ஐ. ஏ. ஸ்தாபனம் அறிவித்திருக்கின்றது.

சோவியத் யூனியனில் அணு விஞ்ஞானிகளாக பணி புரிந்தவர்களை கஸாகிஸ்தான் மூலம் பெற்று, அணு குண்டு தயாரிப்பதில் லிபியா ஈடுபடக் கூடும் என்றும் சி. ஐ. ஏ. ஸ்தாபனம் மேலும் எச்சரித்துள்ளது.

[இ-எ]

# ஒருவித நிரந்தர இணைப்பு இப்போது இருந்து வருகிறது

## தொண்டா கூறுகிறார்

''வடக்கு-கிழக்கு இணைப்புத்தான் பிரச்சினையாக உள்ளது. இணைப்பை எந்தப் பெயர் கொண்டும் அழையுங்கள். எந்தக் கூடைக்குள்ளும் போடுங்கள். ஆனால் ஏதோ ஒருவித நிரந்தர இணைப்பு இப்போது உள்ளது. பின்னர் ஏன் கவலைப்படுவான்?''

ரோய்ட்டர் செய்தி ஸ்தாபனத்திற்கு அமைச்சர் தொண்டமான் அளித்த பேட்டியில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அப்பேட்டியில் திரு. தொண்டமான் மேலும் கூறியதாவது:-

விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தும் எனது முயற்சி சுதந்திரமான ஒன்று.

எனது பேச்சுவார்த்தையின் போது உருவாகும் தீர்வை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளும் என்பதை என்னால் உத்தரவாதப்படுத்த முடியாது.

விடுதலைப் புலிகளுடன் எனது பேச்சுவார்த்தை வெற்றியாக முடிந்து ஒரு சமாதானத் திட்டம் உருவானால் —

நான் அரசாங்கத்தைப் பார்த்து ''உங்களுக்குத் தேவை போரா அல்லது சமாதானமா''— என்று கேட்பேன்.

''உங்களுக்குச் சமாதானம் தேவையானால் இது தான் நீங்கள் அதற்குக் கொடுக்க வேண்டிய விலை'' என்றும் நான் அரசாங்கத்திடம் கூறுவேன்.

எது என்பதைத் தீர்மானிக்கும் பொறுப்பு அவர்களிடம் விடப்படும்.

சமாதான முயற்சிக்கான காலம் விரைந்து போய்க் கொண்டிருக்கிறது. மூன்று மாதங்களினுள் விடுதலைப் புலிகளை பேச்சுவார்த்தை மேசைக்குக் கொண்டு வர வேண்டும். மூன்று மாதங்களைத் தாண்டிவிட்டால் இம் முயற்சி பலனளிக்காது.

— இப்படி திரு. தொண்டமான் சொன்னார்.

## ஐ. நா...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

அகதிகள் தமது சொந்த இடங்களுக்குத் திரும்ப வகை செய்யப்பட வேண்டும்.

இது சம்பந்தமான ஐ. நா. உடன்படிக்கையில் ஸ்ரீலங்காவும், இந்தியாவும் ஒப்பமிட்டுள்ள போதிலும் தமிழகத்திலுள்ள அகதிகளில் முப்பதாயிரம் பேரை இம்மாதம் 21ஆம் திகதி தொடக்கம் கட்டம் கட்டமாகக் கூட்டி வருவதற்கு எடுக்கப்பட்ட முடிவு, அது சம்பந்தமான நடவடிக்கைகள் ஆகியவை குறித்து அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்துடன் இருநாடுகளும் கலந்தாலோசிக்கவில்லை. தகவலுக்காகத் தானும் அறிவிக்கவில்லையாம்.

அகதிகள் திரும்பும் விவகாரம் உரிய விதிமுறைப்படி கையாளப்பட்டிருந்தால் முதல் தொகுதியாகத் திருகோணமலை வரும் அகதிகளை ஐ. நா. அகதிகள் தூதரகமே பொறுப்பேற்க வேண்டும். ஆனால் அது தொடர்பான எந்த நடவடிக்கையையும் கொழும்பில் உள்ள ஐ. நா. அகதிகள் தூதரகம் மேற்கொள்ளவில்லை.

தமிழகத்திலிருந்து அகதிகளை மன்னார், வவுனியாவுக்குக் கூட்டி வருவதற்கு முன்னர் உத்தேசிக்கப்பட்டபோது ஐ. நா. அகதிகள் தூதரகத்தின் உதவியும் சேவையும் கோரப்பட்டிருந்தன.

இம்முறை இந்தியாவும், ஸ்ரீலங்காவும் தமது பாட்டில் அகதிகளைக் கூட்டி வருவதற்கு ஏற்பாடு செய்திருப்பது குறித்து சர்வதேச அகதிகள் அமைப்புகள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளன. அதனைத் தடுப்பதற்கு இரண்டு நாடுகள் மீதும் அழுத்தம் கொடுக்குமாறு அகதிகள் புனர்வாழ்வு சம்பந்தப்பட்ட ஐ. நா. பிரிவினை அவை கேட்டுள்ளதாக அறியவருகிறது. [அ-3]

## ஸ்ரீலங்கா...

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

சேகரா, பிரதிப் பணிப்பாளர் லயனல் குணதிலகா ஆகிய அதிகாரிகளே இந்தியா சென்றிருக்கின்றனர்.

இதேவேளை —

இரகசியப் பொலீஸ் பணிப்பாளர் அமரசேகர ராஜபக்ஸவும் இந்தியா சென்றிருப்பதாக மற்றொரு செய்தி தெரிவித்தது.

(உ-3

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரச அதிபர் கடிதம்

யாழ்ப்பாணம், ஜன. 14

யாழ். மருத்துவ பீடத்தை யாழ்ப்பாணத்துக்கு வெளியே இடம் மாற்றும் முயற்சியை யாழ். மாவட்ட மக்கள் ஒரு போதும் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள்.

— யாழ். அரச அதிபரும் மாவட்ட ஆணையாளருமான திரு. கே. மாணிக்கவாசகர், பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுவின் தலைவருக்கு எழுதியுள்ள கடிதம் ஒன்றில் இவ்வாறு குறிப்பிட்டிருக்கிறார். (உ-5)

## மரண அறிவித்தல்கள்

### சரவணமுத்து பரிபூரணம்

கம்பனை அம்மன் பறாளாய் றோட்டைச் சேர்ந்த மலாயன் பென்சனர் சரவணமுத்துவின் மனைவி பரிபூரணம் 13-1-92இல் காலமானார். அன்னார் நாகேந்திரராஜா, மகேந்திரராஜா, புவனேந்திரராஜா ஆகியோரின் அன்புத் தாயாரும், றஞ்சினிதேவி, சாந்தா, சறோஜினிதேவி ஆகியோரின் மாமியாரும், வாகீஸ்வரி, விதுரன், டினேஸ், டனா, சுரேஸ், சர்மிலன் ஆகியோரின் பேர்த்தியாருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியை இன்று காலை 10-00 மணியளவில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் :
ச. நாகேந்திரராஜா.
(மகன்)

பறாளாய் றோட்,
சுழிபுரம். [19337]

### திருமதி க. சின்னம்மா

புங்குடுதீவு 11 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்தவரும், தற்போது பலாலி றோட், 2 ஆம் ஒழுங்கை, இல. 6/10 இல் வசித்தவருமாகிய திருமதி கதிர்காமு சின்னம்மா அவர்கள் 13-1-1992 இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கதிர்காமு அவர்களின் அன்பு மனைவியும், குணசிங்கம், அமராவதி, ரேவதி, கனகம்மா, காலஞ்சென்ற இரத்தினசிங்கம் ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற வள்ளிப்பிள்ளை [தேவி], தம்பிராசா, சண்முகம், நடராசா, பொன்னம்மா ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 14-1-1992 [இன்று] காலை 10-00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோம்பயன்மணல் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

தகவல்:
ரேவதி
[மகள்]

ஆனைப்பந்தி.
(19342)

### கதிரர் - இளையவன்

ஆவரங்காலைச் சேர்ந்த கதிரர்-இளையவன் 11-01-92 அன்று காலமாகிவிட்டார். இவர் பொன்னம்மாவின் அன்புக் கணவரும், சின்னம்மா, இலட்சுமி, பரிமளம், வயிரமுத்து, இராசமணி, செல்வநாதன் (Ph. D. Program The Univercity of Western Ontario - Canada) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற கிருஷ்ணன், சின்னத்தம்பி, செல்லக்கண்டு, மகாலிங்கம், சந்திரமலர், செல்வசாந்தி (B.Sc., கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், பத்மராசா (கனடா), தருமராசா (இந்தியா), குணராசா (கனடா), ஸ்ரீராகவன், மங்களவதனி, சுகந்தினி, திருச்சந்திரன், சபேசன், விமலச்சந்திரன், கருணாகரன், பிருந்தா, சகுனேஸ்வதி (லெபனான்), பகுனேஸ்வதி, ரவிச்சந்திரன், வனஸ்வதி, ரவிக்குலன் (இந்தியா), கோமதி, சுதாகரன், செந்தூரன், பிரகலாதன், அனுராதா, நகுலேஸ்வரன், மயூரன், கஸ்தூரன், கரன், ஆதவன், சங்கீதா, ரமணன், கார்த்திகா, நர்மதா, அகிலா, திவ்வியா (கனடா) ஆகியோரின் அன்புப் பேரனாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 12-01-1992 ஞாயிறு பிற்பகல் மூன்று மணியளவில் ஆவரங்கால் மயானத்தில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

பொன்னில்லம்,
ஆவரங்கால்,
புத்தூர். [19329]

## பங்களாதேஷ் கடற்படை பலம் அதிகரிக்கும்

டாக்கா, ஜன. 14

பங்களாதேஷ் தனது கடற்படையை பலப்படுத்தப் போவதாக அறிவித்திருக்கிறது.

புதிய போர்க் கப்பல்களை வாங்கப்போவதாக பங்களாதேஷ் பிரதமர் பேகம்காலிதா ஸியா தெரிவித்தார்.

நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கான முயற்சியின் ஒரு கட்டமாகவே படைப்பல அதிகரிப்பு இடம் பெறுவதாகவும் பேகம் காலிதா ஸியா கூறினார்.

## கப்பலில்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

கூடியதாகப் பேணப்பட வேண்டும்.

★ கொழும்புக் கொள்வனவு விலையுடன் 20 சதவீதமும் சேர்க்கப்பட்டதாக மருந்துகளின் மொத்த விற்பனவு விலை அமையும். சில்லறை விலை இம் மொத்த விலையுடன் அதன் பத்து சதவீதம் சேர்க்கப்பட்டதாக இருக்கும்.

★ ஆங்கில மருந்து விற்பனையாளர்கள், ஆயுள்வேத வைத்தியர்களுக்கு ஆங்கில மருந்து வகைகளை விற்பதனைத் தடை செய்தல். [அ-5]

## வன்னியில் ..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

கூடுதலாகப் பாதிக்கப்படுவதாகவும் சொல்லப்பட்டது.

பன்னிரண்டு வயதுக்குட்பட்டவர்களையே இந்நோய்கள் கூடுதலாகத் தாக்குகின்றன.

தொற்று நோயினால் நேற்று முன்தினமும் முழங்காவிலில் ஒரு சிறுமி பலியானதாகவும் —

மேலும் பல சிறார்கள் ஆபத்தான நிலையில் இருப்பதாகவும் தெரியவந்தது.

தொற்றுநோய் பரவுவதைத் தடுத்து நிறுத்த போதிய மருத்துவ மற்றும் சுகாதார வசதிகள் இல்லை என்று அப்பகுதி மக்கள் கவலை தெரிவித்தனர். [உ-3]

## மரண அறிவித்தல்

### அமரேசர் புவனேந்திரன்

நல்லூர் - மூத்தவிநாயகர் கோயில் வீதியைச் சேர்ந்த அமரேசர் புவனேந்திரன் [உரிமையாளர், பரி. ஹாட் வெயர்ஸ், முத்திரைச்சந்தி] நேற்றுக் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அமரேசர்-பாக்கியம் ஆகியோரின் அன்பு மகனும், தயாளேஸ்வரியின் அன்புக் கணவரும், ஜெயரூபன், தர்மிளா, பரிமளா, கயாளிசளா ஆகியோரின் அன்புத் தந்தையும், அமரசிங்கம், நித்தியானந்தம், அருளானந்தம், குணரத்தினம், குலேந்திரன் [பிரான்ஸ்], பாலரத்தினம் [பிரான்ஸ்] ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்ற சரவணமுத்து - நல்லம்மா [நயினாதீவு] ஆகியோரின் மருமகனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று [14-1-92] பிற்பகல் 3 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் :
அ: குணரத்தினம்

[19343]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 14-1-1992 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## திருமறைக் கலாமன்றம் வழங்கும் பொங்கல் தின விழா

இடம்: 238, பிரதான வீதி, யாழ் நகர்
காலம்: 15-1-1992 தைப்பொங்கல் தினம்

காலை 7-00 மணிக்கு சித்திரக் கண்காட்சி
காலை 8-00 மணிக்கு பண்பாட்டுத் திருப்பலி
மாலை 5-30 மணிக்கு ''நாதஸ்வர மெல்லிசை''
மாலை 6-30 மணிக்கு கவியரங்கு
மாலை 7-00 மணிக்கு பட்டி மண்டபம்

பொருள்: "பொங்கல் விழா இன்று பொருள் உள்ள விழாவா?"

அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

கௌரவ செயலாளர்,
திருமறைக் கலாமன்றம்.

[சி/1328]

## முக்கிய அறிவித்தல்

அசல் ஆர். வி. ஜி பீடிகளைப் போல் ஒரு சில பேர்கள் **தரத்திலும் விலையிலும் குறைந்த போலி** ஆர். வி. ஜி பீடிகளை விற்பனை செய்வதாக எமக்கு அறியவந்துள்ளது. அசல் ஆர். வி. ஜி பீடியின் விலையில் மாற்றம் எதுவும் இல்லை.

**குறைந்த** விலையில் போலி ஆர். வி. ஜி பீடி விற்பனை செய்பவர்களை இனம் கண்டு எமக்குத் தகவல் தருமாறு பீடி விற்பனையாளர்களை அன்புடன் வேண்டுகிறோம். இது தொடர்பாக தகவல் தருபவர்களுக்கு **தகுந்த சன்மானம்** அளிக்கப்படும்.

ஆர். வி.ஜி நிர்வாகம்.
58, குறுக்கு வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

(19273)

## 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 05 — 04 — 1938

மறைவு: 14 — 01 — 1991

அமரர்

### முருகுப்பிள்ளை தர்மதாசன்

(1 ஆம் தர கிராமசேவை அலுவலகர், சுழிபுரம்)

மங்களம் பொங்கும் திங்கள் வதனம்
பொங்கும் நாளில் பொலிவை இழந்திட
எங்கும் இனித்திடும் இனிய தைநாள்
எங்களுக் கென்றும் கரிநாள் ஆனது!
எங்கள் நலமே தங்கள் நலமாய்
மண்ணில் வாழ்ந்து மறைந்தீர் அப்பா
ஆண்டு ஒன்று அனலாய் கழிந்தது
யாண்டும் உங்கள் நினைவுகள் மறவோம்

கலைநகர்,
வட்டு கிழக்கு,
சித்தன்கேணி.

பாசமான அப்பாவின்
நினைவாக
மனைவி, பிள்ளைகள்

[19339]

## மரண அறிவித்தல்

### நவரத்தினம் இராசம்மா (இராசு)

காரைநகர் நீலிப்பந்தனையைச் சேர்ந்த காலஞ்சென்ற நவரத்தினம் [சிறாப்பர்] அவர்களின் அன்பு மனைவி இராசம்மா நவரத்தினம் 03-01-1992 வெள்ளிக்கிழமை காரைநகரில் காலமாகிவிட்டார். இவர் அன்னம்மா (பரந்தன்), இராஜேந்திரன் [லண்டன்], பாலேந்திரா [லண்டன்], இந்திரதேவி, கருணாவதி, காலஞ்சென்ற கருணாதேவி ஆகியோரின் அன்பு தாயாரும், காலஞ்சென்ற சதாசிவம் மற்றும் சிவகாமி, செல்வராணி, சிவநேசன் ஆகியோரின் மாமியாரும், சிவராஜா, சிவாஜினி, சிவகுமார், காண்டீபன், அமரிசுரணா, யோகினிகருணா, பிரபாகரன், துளசி, சிவப்பிரியா, சுகன்யா ஆகியோரின் பேர்த்தியாரும் ஆவார். இத்தகவலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க. சிவநேசன்,
(மருமகன்).

வட்டு. மேற்கு,
வட்டுக்கோட்டை. [19336]

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org